Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம்.

அத்தியாயம் 20.

மகாத்மாகாந்தி தமது அனுபவங்களை "யௌவன இந்தியா" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதி வருவதில், 2-வது பாகம் 20-வது அத்தியாயம் பின் வருமாறு:—

நம் மனதில் ஒரு பரிசுத்தமான எண்ணம் உதித்தால், அம்மனோரதம் எப்போதும் நிறைவேறுவதைக் காணலாம். என்னுடைய அனுபவத்தில், இது பல முறை நிரூபணமாயிருக்கிறது. ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் மனதிற்கினிய தொண்டு; ஆகையால் ஏழைகளின் மத்தியில் நான் வசாவாழ்ந்து கொண்டு, ஏழைக்கு ஏழையாயிருந்து, அவர்களுக்கு ஸேவை செய்ய சந்தர்ப்பம் வாய்த்து வந்திருக்கிறது.

நான் ஏற்கெனவே பிரஸ்தாபித்த நேட்டால் இந்தியகாங்கிரஸில் அங்கேயே பிறந்த இந்தியர்களும், குமஸ்தாக்களும் அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டன ராயினும், ஒப்பந்தக்கூலிகளும் சரீரவேலைத் தொழிலாளர்களும் அதில் சேரவில்லை. காங்கிரஸ் மகாசபை அவர்களுடையதாக இன்னும் ஆகவில்லை. சந்தாச் செலுத்தி காங்கிரஸில் சேர அவர்களால் முடியவில்லை. அவர்களுக்குத் தொண்டு புரிவதன் மூலமாக மட்டும் காங்கிரஸ் அவர்களுடைய பிரீதியைப் பெறக்கூடிய நிலைமையில் இருந்தது. அவர்களுக்கு காங்கிரஸ் பக்தியை உண்டுபண்ணக்கூடிய ஓர் எதிர்பாராத சம்பவம் திடீரென நிகழ்ந்தது. நான் லாயர் தொழிலை யாரம்பித்து அப்போது 3, 4 மாதங்களே யிருக்கும். காங்கிரஸுக்கும் அது இளமைப் பருவம். இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு தமிழன் கந்தைத் துணியுடுத்தி, கையில் தலைப்பாகையை எடுத்து வைத்துக் கொண்டு, முன்பல்லிரண்டு உடைந்து வாயிலிருந்து இரத்தம்வழிய என் முன்பாக வந்து தோன்றினன். அவனுடைய எஜமானர் அவனை நன்ருக அடித்துப் போட்டுவிட்டார். என்னுடைய தமிழ் குமஸ்தா மூலமாக அவ் விஷயம் எனக்குத் தெரிய வந்தது. காயத்துடன் என்னைக் காண வந்த தமிழரின் பெயர் பாலசுந்தரம். டர்பன் வாசியான ஒரு பிரபல ஐரோப்பியரின்கீழ் பாலசுந்தரம் ஒப்பந்தக் கூலிவேலை செய்து வந்தான். எஜமானருக்குத் திடீரென்று கோபம் வந்து பாலசுந்தரத்தை பலமாக அடித்ததில் இரண்டு பற்கள் உடைந்து விட்டன.

உடனே வைத்தியரிடம் பாலசுந்தரத்தை யனுப்பினேன். வெள்ளைக்கார வைத்தியர்கள்தான் அக்காலத்தில் அகப்பட்டார்கள். பாலசுந்தரத்துக் குண்டான காயத்தைப் பற்றி ஒரு சர்டிபிகேட் கொடுக்கும்படி வைத்தியரைக் கேட்டேன். சர்டிபிகேட் கிடைத்தது. நேராக பாலசுந்தரத்தை மாஜிஸ்டிரேட்டினிடம் அழைத்துச் சென்றேன். அவர் முன்பாக ஒரு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தேன். முதலாளிக்கு மாஜிஸ்டிரேட்டு சம்மன் பிறப்பித்தார். என்னுடைய பிராதைப் பார்த்தபோது மாஜிஸ்டிரேட்டுக்கே ஆத்திரம் தாங்க முடியவில்லை.

பாலசுந்தரத்தின் எஜமானருக்குத் தண்டனை வாங்கிக்கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பமன்று; பாலசுந்தரத்தை அவரிட மிருந்து விடுவிக்கவே நான் விரும்பினேன். முன்னறிக்கை இல்லாமல் ஒரு சேவகன் சாதாரணமாக வேலையை விட்டால் அவன்மீது எஜமானர் சிவில் கோர்ட்டில் பிராது தொடரலாம்; ஆனல் ஒப்பந்தக் கூலிகள் அம்மாதிரி வேலையை விட்டால் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் முதலாளி பிராது கொடுத்துவிடலாம்; காவல் தண்டனையும் கைமேல் கிடைத்துவிடும்.

ஒப்பந்தக் கூலிமுறை அடிமைத்தனத்துக்கே சமானமென்று ஸர் வில்லியம் ஹண்டர் சொன்னது முற்றிலும் உண்மை. அடிமையைப்போல் ஒப்பந்தக் கூலிகளும் தங்களுடைய சரீரத்தை முதலாளிகள் கையில் ஒப்படைத்துவிட வேண்டி யிருந்தது.

இந்த நிலைமையில் பாலசுந்தரத்தை விடுவிக்க இரண்டே வழிகள் இருந்தன. ஒன்று, கூலி ஒப்பந்தத்தை ரத்துசெய்து வைக்கலாம்; இல்லாவிடில் இன்னொரு எஜமானரிடம் பாலசுந்தரத்தை மாற்றிவிடலாம்; அல்லது பாலசுந்தரத்தை விடுவிக்கும்படி எஜமானருக்குத் தாக்கீது பிறப்பிக்கும்படி செய்யலாம். பாலசுந்தரத்தின் எஜமானரை நான் போய்ப் பார்த்து "உங்கள் மீது வழக்குத் தொடரவோ, தண்டனை கிடைக்கச் செய்யவோ எனக்கிஷ்டமில்லை. பலமாக பாலசுந்தரத்தை நீங்கள் அடித்துவிட்டீர்கள். ஆகையால் ஒப்பந்த சாஸனத்தை இன்னொருவருடைய பெயருக்கு மாற்றிவிட்டால் போதும்" என்று சொன்னேன். எஜமானர் அதற்குத் தயாராக சம்மதித்தார். பிறகு தொழிலாளர் ரக்ஷகர் என்ற உத்தியோகஸ்தரிடம் சென்றேன். பாலசுந்தரத்துக்கு மற்றொரு எஜமானரை நான் கண்டுபிடித்துக் கொடுத்தால் அவரும் என்னுடைய ஏற்பாட்டுக்குத் தயார் என்று சொன்னர்.

அதன்மேல் நான் புதிதாக ஒரு எஜமானரைக் கண்டு பிடிக்கப் புறப்பட்டேன். அவர் ஓர் ஐரோப்பியராக விருந்து தீரவேண்டும். ஏனெனில் எந்த இந்தியரும் ஒப்பந்தக்கூலிகளை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாது. அக்காலத்தில் வெகு சில ஐரோப்பியர்களையே எனக்குத் தெரியும். அவர்களில் ஒருவரை நான் போய்ப்பார்த்தேன். பாலசுந்தரத்தை வேலைக்கெடுத்துக் கொள்ள அவர் அன்புடன் இசைந்தார். நான் அதற்கு நன்றி பாராட்டினேன். பாலசுந்தரத்தின் பழைய எஜமானர் செய்தது குற்றமென்று மாஜிஸ்டிரேட்டு தீர்ப்புச்செய்து, பாலசுந்தரத்தை இன்னொருவருக்கு மாற்றிவிட எதிரி சம்மதிப்பதாகவும் தீர்ப்பில் குறிப்பிட்டார்.

பாலசுந்தரம் அடிபட்டதும், அவர் சார்பாக வழக்கு நடந்ததும், இதர ஒப்பந்தக் கூலிகளுக்குத் தெரிய வந்தவுடனே, என்னைத் தங்கள் நண்பராக எல்லாரும் கொண்டாட ஆரம்பித்தார்கள். எனக்கும் அது களிபெருவகை யளித்தது. ஒப்பந்தக் கூலிகள் கூட்டங் கூட்டமாக என்னுடைய காரியாலயத்துக்கு வர ஆரம்பித்து விட்டனர். அவர்களுடைய துக்கத்தையோ சந்தோஷத்தையோ நான் அறிந்துகொள்ள அதன் மூலமாக ஓர் உத்தமமான சந்தர்ப்பம் ஏற்பட்டது.

பாலசுந்தரத்தின் சமாச்சாரம் வெகு தூரத்திலுள்ள சென்னைக்குங் கூட எட்டிவிட்டது. அம்மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் நேட்டாலுக்கு ஒப்பந்தத்தின் மேல் சென்ற தொழிலாளர்கள், தங்களுடைய இதர சகோதரர்கள் மூலமாக பாலசுந்தரம் சமாச்சாரத்தை அறிந்துகொண்டனர். பாலசுந்தரத்தைப்பற்றிய சமாச்சாரத்தில் விசேஷமெதுவுமில்லை. ஆனல் நேட்டாலில் தங்களுடைய கட்சியை எடுத்துரைத்து, தங்களுக்காக வேலை செய்ய யாரோ ஒருவர் வந்திருக்கிருர் என்ற சமாச்சாரந்தான் அத்தொழிலாளர்களுக்கு சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணிற்று.

பாலசுந்தரம் முதல் முதலாக என்னிடம் வந்தபோது, முண்டாசைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டிருந்ததாக நான் சொன்னேன். அதில் ஒரு விசேஷ மிருக்கிறது. தலைப்பாகையைக் கையில் எடுத்து வைத்துக்கொள்வது ஓர் அவமானமாகும். தாழ்ந்த அந்தஸ்துக்கு அது ஓர் சின்னம். நியாய ஸ்தலத்தில் என்னை ஒரு தடவை அதே மாதிரி தலைப்பாகையை எடுத்துவிடும்படி கோர்ட்டார் சொன்னதைப்பற்றி நான் ஏற்கெனவே பிரஸ்தாபித்திருக்கிறேன். எந்த சந்தர்ப்பத்திலும், எந்த இந்தியரும், ஓர் ஐரோப்பியரைக் காணப் போவதென்ருல் அவனுடைய தலைப்பாகையோ, முண்டாசையோ குல்லாவையோ, எடுத்துவிட வேண்டுமென்று ஒரு ஆசாரம் அங்கு நிர்ப்பந்தமாக ஏற்பட்டிருந்தது. இரண்டு கைகளையும் கூப்பி நமஸ்கரித்தால்கூட அது போதாதாம். அதே ஆசாரத்தை என் முன்னிலையிலும் அனுஷ்டிக்க வேண்டுமென்று பாலசுந்தரம் நினைத்துவிட்டதாகத் தெரிகிறது. எனக்கது புதுமையாயிருந்தது. எனக்கே அவமான முண்டாகிற்று. முண்டாசைத் தலையில் கட்டும்படி சொன்னேன். கொஞ்சம் தயங்கி, பிறகு எடுத்துக்கட்டிக்கொண்டான். கட்டிய பிறகு அவன் முகத்தில் சந்தோஷம் ஜொலித்தது. ஒரு மனிதன் மற்றொரு மனிதனை அவமானப்படுத்துவதன் மூலமாக, தான் பெருமையடையப் பார்ப்பதன் நோக்கம் இன்னதென்று எனக்கு இன்று வரை புலப்படாமலே யிருந்துவருகிறது.

---

## மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

### புத்தர் ஞானம்.

(முருகதாசன் எழுதுகிருர்)

அப்பொழுது இளவரசன் சொன்னதாவது:—ஆம், நான் புறப்பட வேண்டிய காலம் சமீபித்து விட்டது. நம்மைப் பிரித்தபோதிலும் உலகத்தைக் காப்பாற்றும் வழிக்கு உன் வாயில் வரும்சொற்களே என்னை அழைக்கின்றன. எனதாகக் கூடிய சிங்காசனம் எனக்கு வேண்டாம். நான் அரசனுகி வேற்றரசருக்கு விரோதமாகச் சுழற்றும் என் கூரியவாளின் பிரகாசத்தைக் காணக் காத்துக் கொண்டிருக்கிற இவ்விராச்சியத்தை விட்டு விடுகிறேன். யுத்த களத்தில் ஆயிரக்கணக்காய்ச் செத்த போர் வீரர்களின் உதிரத்தில் என் இரதம் ஊர்ந்து சென்று அதனுல் எனக்கு ஜெயமும், கீர்த்தியும் கிடைக்க வேண்டியதில்லை. ஆனல் இப்பூமியில் வருந்தி நடந்து தரையில் கிடந்து அதின் கானகங்களில் வசித்து அதின் தாழ்ந்த பிராணிகளுடனேயே பழகி தாழ்ந்த சண்டாளர்கள் உடுத்தும் உடையிலும் உயர்ந்த தொன்றுண்டா? அது நல்லோர் கொடுக்கும் பிச்சையைத் தவிர வேறு உணவில்லாமல் குகை அல்லது புதர்களைப் பார்க்கிலும் உயர்ந்த வீடுகளில் வசியாமல் சஞ்சரிப்பதே போதும். ஏனெனில் இவ்வுலகத்தில் உயிர் வாழ்வன வற்றின் புலம்பலெல்லாம் என் செவியில் எட்டிற்று. என் உயிர் உலகத்தின் துன்பத்தினுல் வருந்துகிறது. வரும் இடையூறுகளுடனெல்லாம் சண்டையிட்டு அதற்காக எனது என்று நான் சொல்லக் கூடியவை எல்லாவற்றையும் துறப்பதினுல் இத்துன்பத்தை நீக்க முடியுமானுல் நான் நீக்குவேன். மனிதர்கள் இவ்வுலகத்தின் துன்பங்களின் மேலுள்ள பயத்தினுல் தெய்வங்களை ஆராதித்தலினுலாவது இக்கஷ்டங்களிலிருந்து நீங்கோமா என்று அவர்களை வணங்குகிருர்கள். அதனுல் என் சகோதரராகிய இம்மனிதருக்கு மூப்பினுலும், பிணியினுலும், பிரிவினுலும், மரணத்தினுலும், மரணத்துக்குப் பின் வரும் ஜனனங்களாலும் உள்ள கஷ்டங்களிற் சிறிதளவேனும் நிவர்த்தியாகிறதா? என் சகோதரியாகிய ஸ்திரீகள் தாங்கள் அனுஷ்டிக்கிற விரதங்களினுலாவது, தெய்வங்களுக்குக் கொடுக்கிற நிவேதனத்தினுலாவது, துளசி மரத்தைச் சுற்றி வருகிற பிரதக்ஷணங்களினுலாவது பிரசவ காலத்திலுள்ள வேதனையிற் சிறிதேனும் குறைத்து அனுபவிக்கிருர்களா? ஒரு ஜீவன் புல்லாய், பூண்டாய், மரமாய், புழுவாய், பறவையாய், மிருகமாய், மனிதனுய், தேவனுய் இப்படி ஒரு பெரிய வளையம் சுற்றி வருகிறதென்று சாஸ்திரங்கள் சொல்வது உண்மையானுல் இப்பிரபஞ்சமெல்லாம் ஒரே தன்மையதாய் ஓரிடத்தினின்றுண்டானதா யிருக்கிறது. ஆகலால் மனிதரைக் காப்பாற்றும் வழி மற்றெல்லாவுயிர்களையும் காப்பாற்றும். ஆம்! அவ்வழி எங்காயினுமிருக்க வேண்டும். நெருப்பை மறைத்து வைத்துக்கொண்டிருந்த, தீத்தட்டிக் கல்லினின்று அதை ஒருவன் வெளிப்படுத்தியதுவரை மனிதர் குளிரினுல் வருந்திக்கொண்டிருந்தார்கள். ஒருவன் மிகுந்த சிரமத்துடன் எழுத்துக்கள் உண்டு பண்ணினது வரை மனிதர்கள் தம் மெண்ணத்தை தூரத்திலுள்ளவருக்கும் பின் சந்ததியார்க்கும் சரியானபடி வெளியிடமுடியாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அனுபவிக்கும் சுகங்களெல்லாம் அவர்களுக்கு முன்னுள்ளவர்கள் வருந்திக்கண்டு பிடித்ததினுலேயே வந்தன. ஆகையால் உலகத்தில உயர்ந்தவனும், பாக்கியவானும், சம்பத்தும்செளக்கியமும் பூரணமாயுள்ளவனும், பிறவி முதல் இராச்சியமான ஏற்பட்டவனும், இவ்வுலகத்திய சுகங்களை அனுபவித்து வயதினுல் அவைகளின் மேல் ஆசையற்றுப் போகாமல் புதிதாக அவைகளில் இறங்கிக்களிக்கிறவனும், வயது முதிர்ந்து நரை திரை வந்து கூனி நடக்காமல் இவ்வாழ்வின் துன்பங்களுடன் கலந்திருக்கிற அழகினுலும் யௌவனத்தினுலும் திருப்தியடைந்தவனும், இவ்வுலகத்தின் இனியவைகளினின்று தனக்குவேண்டுவனவற்றைத்தெரிந்தெடுக்க சக்தியுள்ளவனும், ஈனதல்லாத மூப்பும் பிணியும் வறுமையும் துயரமும் ஆகிய துன்பங்களால் அல்லாமல் வேறொன்றினுலும் வருத்தப்படாதவனுமுள்ள என்னைப்போன்ற ஒருவன் இவ்வளவு பெரியபாக்கியங்களையெல்லாம் மனிதர்க்காக இழந்துமேலுலகத்திலோ கீழுலகத்திலோ எங்கிருந்தாலும் சத்தியத்தைக் கண்டுதான் விடுவதென்ற தீர்மானத்துடன் தன் வாழ்நாளை அதற்கே செலவிடுகிறதாயிருந்தால், அவனுக்கு இப்பெரிய உண்மையை மறைத்துவைக்கும் திரை ஏதாவது ஒரு பக்கம் திறக்கும். எல்லாரையும் துன்பத்தினின்று நீக்கி சுகத்திற் கொண்டு போய்ச் சேர்க்கும் மார்க்கம் எவ்விடத்திலாவது தென்படும். இது கைகூடுமானுல் நான் அரசாளுவதைவிட அரசைத் துறப்பதினுல் எனது ஜனங்களின் துன்பத்தை நீக்க வல்லவனுவேன். என் ராச்சியத்தின் மேல் உள்ள அன்பினுல் என் ராச்சியத்தைத் தள்ளிவைக்கிறேன். என் இளமையையும் கிரீடத்தையும் என் இன்பங்களையும் இவைகளெல்லாவற்றிலும் துறக்க மிகக் கொடிதான என் ஆருயிர்க்காதலியையும் துறக்கிறேன். என் அன்பே! ஆயினும் நான் நல்லமார்க்கத்தைக்கண்டு பிடிப்பதால் உலகத்தைக் காப்பாற்றுவதுபோல் உன்னையும் உன்வயிற்றிலிருக்கும் சிசுவையும் காப்பாற்றுவேன். என்னை வளர்த்தெடுத்த என் தந்தாய்! என்னை அன்புடனேசிக்கும் ஜனங்களே!! நான் இப்பொழுது புறப்படுவதினுலுண்டாகும் வருத்தம் உங்களையும் சிறிது பிடிக்கும். ஆயினும் உங்களுக்காகவே நான் போகிறேன். இனி நான் போகலாம்; நான் தேடுவதைக்கண்டு பிடிக்கும்வரை திரும்பேன் என்று பள்ளியறைக்குள்ளிருந்தே சொல்லிக்கொண்டான் இளவரசன்.

---

அரைக்கீரை யுணவை
அநாகரீகமெனத் தள்ளாதே!
ஆரோக்ய மளிக்கும்,
ஆயுளை
வளர்க்கும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## மூவாசை

## வீண் மாயையா ?

நீத்தார் என்னில் எதனின்றும் நீத்தார் என்பது சிந்திக்கற்பாற்று. உலக ஆசையினின்றும் நீத்தார் என்று பொதுவாக நமது தேசத்தில் சொல்லப்படுவது வழக்கம். அவ்வாசையை மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை என்று தொகுத்துக்கூறலுமுண்டு. எல்லா ஆசைகளினும், கொடியது பெண்ணாசை என்றும், அவ்வாசையொழித்தால் மற்றைய ஆசைகளை ஒழித்தலாகும் என்றும் சொல்லுவோருமுளர். ஞான நூல்கள் என்று சொல்லப்படும் நூல்கள் மண் பொன் பெண் மூன்றையும்பற்றிய ஆசையைத் தொலைத்தவரே நீத்தாரென்று சொல்லுவது உங்களில் பெரும்பான்மையோர்க்குத்தெரியும். அவ்வாசைகளை நீத்தல் நீத்தலாகாதென்றும் அவைகளை மாயை யெனக்கருதி நீத்தல் வேண்டுமென்றெழும் எண்ணத்தினின்றும் நீப்பது அதாவது விடுதலையடைவது நீத்தல் என்றும் நான் சொல்லுகிறேன். என்ன! முற்றும் மாறான கொள்கை!! என்று உங்களிற் சிலர் கருதலாம். மண் பொன் பெண் ஆகிய இம் மூன்றன் கண் ஆண்டவன் இருக்கிறனா இல்லையா பாருங்கள். அவைகளிலும் ஆண்டவன் இருக்கிறான். அங்ஙனமாக அவைகளை என் வெறுத்தல் வேண்டும்? அவைகளை மாயையாகக் காட்டும் அறியாமையினின்றும் நீத்தலே நீத்தலாகும்.

அறியாமை எப்படியிருக்குமென்று சிலர் கேட்கலாம். குரு சிடனுக்கு பொருளுண்மை உணர்த்தும்வரை அச்சிடனுக்குப் பொருளுண்மை விளங்காமலிருக்கிறது. பொருளுண்மைவிளங்காதவாறு மறைப்பது அறியாமை எனபது. ஒன்றையொன்றாகத் திரித்துக் காட்டுவது அறியாமை. பொருளல்லவற்றைப் பொருளாகக் காட்டுவது அறியாமை. மனிதனிடத்துள்ள எல்லாப் பொல்லாமைக்குங் காரணமாக நிற்பது அறியாமை. அவ்வறியாமை தொலைந்ததும் மெய்ப்பொருள் புலனாகிறது. ஆண்டவன் மண், புனல், தீ, காற்று, வானம், திங்கள், ஞாயிறு, உயிர் என்னும் எட்டினும் கலந்து நிற்கிறான். அறியாமையினின்றும் விலக்கிக்கொண்டவனுக்கு அக்கலப்பு புலனாகிறது. விலகாது கிடப்போனுக்கு அவை மண் முதலிய பொருளாகவே தோன்றும். அறியாமையே எல்லாத் துன்பங்களுக்கும் மூலமாயிருத்தலால் அதை தேய்க்க முயலல்வேண்டும். அறியாமை தேய்ந்தொழிந்தால் மெய்யறிவு இயல்பாக மிளிரும் ஆகவே அறியாமையினின்றும் விலகினவனே நீத்தோனவன்.

உலகை மாயையெனக்கருதி அதை நீத்தல்வேண்டும் என்னும் எண்ணம் மாறி எல்லாம் சிவமயம் என்னும் எண்ணம் பெறுதற்குரியவழி என்னை என்று சிந்திக்கவேண்டுவது நமது கடமை. ஏட்டு நூல்களைப் படிப்பதானும், காவியுடுத்தல் முதலிய கோலங்களானும் காட்டுக் கோடுவதானும் மனத்துக்கணுள்ள ஆசைநோய் போகாது. மனமாசகல வேண்டுமானால் மனிதன் இல்லறமேற்கொண்டொழுகல் வேண்டும். "மனத்தின் கண் மாசிலனாதல் அனைத்தறம்" என்று அறவியல்பு அறிவுறுத்திய திருவள்ளுவனார், பின்னை இல்லற நெறியின் இன்றியமையாமையையும் அதற்குரிய வாழ்க்கைத்துணை நலத்தையும், புத்திரப்பேற்றையும்முறை முறையே விளக்கி கூறிச் செல்லுதல் காண்க. உலகில் இல்லற நெறியில்லையேல் பெரியோர்கள் தோற்றத்துக்கே வழியில்லாமல் போய்விடும். மகாத்மாகாந்தியின் தாய் தந்தையார் இல்லறம்நடத்தாதொழிந்திருப்பரேல், இவ்வுலகம் நம் பெருமான் காந்தியடிகளைக் கண்டிருக்க முடியுமோ? அன்பர்கள் அருளாளர்கள், பெரியோர்கள் தோன்றுதற்கு நிலைக்களனாயுள்ள இல்லறம் இன்றியமையாதது. இல்லறம் படிப்படியாக ஒருவனது மாசையும், ஒருத்தியினது மாசையும் துடைத்துக்கொண்டு போவது கவனிக்கத்தக்கது. மனிதனது தன்னலம் இல்லறத்தில் எவ்வாறு பலியாகிறதென்பதுங் கவனிக்கற்பாற்று. ஒருவன் ஒருத்தியோடு வாழ்வதற்கு முன்னர்பெரிதும் தன்னையே நேசிக்கிறான். மனைவியோடு வாழ்நாள்தொட்டுத் தன்னைப்போல் தன் கிழத்தியாரையும் நேசிக்கத் தொடங்குகிறான். பின்னை அந்நேசம் பிள்ளைகளிடத்தில் பரவுகிறது. பின்னைப்பிற உயிர்களிடத்துப் பரவுகிறது. உயிர்களை நேசிக்கும் உள்ளத்தில் தன்னலமேது? திருவள்ளுவனார் வகுத்துள்ள அதிகாரமுறை வைப்பை நோக்குக. அறச்சிறப்பு இல்லறம், வாழ்க்கைத்துணை நலம், புத்திரப்பேறு அன்புடமை, விருந்தோம்பல், இம்முறையினைக் கவனிக்க ஒருவன் ஒருத்தியோடு வாழாது கிடப்பது இயற்கைக்கு மாறுபாடு என்பதும் ஆராயற்பாலது. சுருங்கக் கூறின் தன்னலக் கேட்டுக்கும், அன்புப்பெருக்கிற்குங்கருவியாயிருப்பது இல்லறமேயாகும்.

அவ்வில்லறத்துக்குரிய பெண்ணைப் பழிப்பதும், அவளாசை நீத்தல்வேண்டும் என்று சொல்வதும்என்னை என்று சிலர் வினவலாம். கடவுள் இயற்கைப் படைப்பாகிய பெண்ணை எவ்வாறு நீத்தல் இயலும்? உலகில் தாவர முதல் மனிதன் ஈறாக உள்ள எல்லாப் பொருளும் ஆண் பெண் வடிவாயிருக்க அவைகளுக்குக் காரணராயுள்ள கடவுளும் ஆண் பெண் வடிவாயிருக்க ஒரு பாதி இயற்கையை நீத்தல் வாழ்வைக் குலைப்பதாகும். "மண்ணாசை" தன்னில், பொன்னாசை. பெண்ணாசை நீத்தல் அரிதோ பெரியோர் தமக்கும்" என்று ஆன்றோர் கூறியதென்னை என்று கேட்கலாம். பெண்ணாசை துறத்தல்வேண்டும் என்பதற்கு வண்டி வண்டியாகப் பாட்டுகள் கிட்டக் கூடும். பெண்ணாசை என்பதில் ஆசை எவரிடத்திலிருக்கிறதென்பதை அன்பர்களே! சிந்தியுங்கள். ஆசை பிறக்கிற இடம் ஆண் மகன் மனமன்றோ? அம்மனந் திருந்தினால் பெண் மாயையாகத் தோன்றுவளோ? அவள் தெய்வமாக அன்றோ தோன்றுவாள். பெண்ணைமாயையாகக் கருதும் பாழ் மனம் ஆடவன் பாலதே.

அம்மன மாசகற்றப் பெண்ணை விடுத்துக் காட்டுக்கோ, மலைக்கோ சிலர் ஓடுகிறார். எங்கே ஓடினாலும் காமஞ் சுடா தொழியுமோ? பெண்ணைக் காமப் பொருளாகக் கருதிக்கொண்டிருக்கு மட்டும் மனமாசு அகலாது; அம்மனத்தோடு வாழ்ந்தாலும் மனிதன் காமத்தால் எரிக்கப்படுவான். மனிதன் பெண்ணைக் காமப்பொருள் என்று எண்ணும் எண்ணத்தினின்றும் நீத்தல்வேண்டும்; அவ்வாறு நீத்தாரே நீத்தாராவர். தெய்வ வடிவாய பெண்ணையும் பிறவற்றையும் மாயையெனக் கருதி அவைகளை நீப்பது நீப்பதாகாது; பொருளல்லாவற்றைப் பொருளாகக் காட்டும் அறியாமைக் கட்டினின்றும் துறப்பதே துறவு.

மகாத்மா காந்தியைப் பாருங்கள். மகாத்மாகாந்தி உலக நடுவில் மண், பொன், பெண்ணடுவில் வீற்றிருக்கிறார். அவர் பெண் மக்களை கண்டால் காய்ந்து விழுவதில்லை; மாயை, மாயை என்று ஓடுவதில்லை. அவர் பெண்மக்களை அன்புத் தெய்வவடிவாய்க் காண்கிறார். சுந்திரமூர்த்தி சுவாமிகள் வரலாறு உங்களுக்குத் தெரியும். இயற்பகையார், சிறுத்தொண்டர் முதலிய செயற்கருஞ்செயல் செய்த தீரர்கள் பெண்ணை விடுத்துக் காட்டுக் கோடினார்களில்லை. இல்லறத்திருந்தே எல்லா உயிரையுஞ் சிவமாகக் கண்டவரே மாயை நீத்தவராவர். ஆண்மக்களுடைய பாழ் மனம் பேய் மனம் பெண்ணுலகைக் கெடுப்பதை ஈண்டு விரித்துக்கூற வேண்டுவதில்லை. ஆண்மக்கள் அறியாமையன்றோ வேசைக் கூட்டமாகப் பரிணமித்திருக்கிறது? இக்கருத்துப்பட மகாத்மாகாந்தி பாரிஸால் வேசையர் முன்னிலையில் பேசியிருக்கிறார். ஆதலால் சகோதரர்களே! நீத்தார் என்றால், எல்லாவற்றையும் விடுத்து ஓடுபவர் என்று கொள்ளற்க. உலகை மாயை யெனக்கருதும் அறியாமையினின்றும் நீத்தவரே நீத்தாராவர். அவருக்கு எல்லா உயிருந் தம்முயிர்போல் தோன்றும். அவரே அந்தணர்; அறவோர். இக்கருத்துப் பற்றியே திருவள்ளுவனார் "நீத்தார் பெருமை" என்னும் அதிகார இறுதியில் "அந்தணரென்போர் அறவோர் —மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்று அருளிச் செய்துள்ளார்.

இனி நீத்தார் பெருமை கூறப்போகிய காலமின்மை குறித்து வருந்துகிறேன். சுருக்கமாகச் சில உரைகளால் அப்பெருமை புகன்று எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். திருவள்ளுவர் "செயற்கரிய செய்வர் பெரியார்" என்று நீத்தார் பெருமையில் ஓதியிருக்கிறார். பெரியார் என்பதற்குப் பெருமையுடையார் என்பது பொருள். பெருமையாவது எது? செயற்கு அருஞ்செயல் குண்டு பீரங்கி செய்வதா? ஆகாய விமானம், விடக்காற்று முதலியன செய்வதா? அன்று, அன்று! உலகைமாயை யெனக்கருதுங் கருத்தினின்றும் நீத்து எல்லாம் கடவுள் மயம் என்னும் கருத்துப் பெற்று எவ்வுயிரையுந் தம்முயிர் போல் பாவித்து அவர்க்கு நலஞ் செய்வது செயற்கருஞ் செயலாகும். அச்செயற் கருஞ் செயல் நீத்தார் பெருமை. இந்நீத்தார் பிறர்க்கு இனிது செய்வதோடு, பிறர் தம்மைத் துன்புறுத்த நேரும் போது, பழிக்குப் பழிவாங்கும் உளங் கொள்ளாது அன்புளங்கொண்டு அவர் துன்பத்தைப் பொறுத்து அவர்க்கு நலஞ்செய்வர். இப்பொறுமையே அவர் பெருமை. (நவசக்தி)

## துண்டுத் துணுக்குகள்.

திருவாரூர் ரதம்:—சமீபத்தில் தீக்கிரையான திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியினுடைய ரதத்திற்குப் பிரதியாக தென்னிந்திய நாடகக்கம்பெனிகளில் மிகப் பேர்வாய்ந்த கன்னையா கம்பெனியார் 100000 ரூபாய் செலவு செய்து புதிய ரதமொன்றுண்டாக்கக் கருதியுளராம்.

• •

ரயில்வே டிக்கெட் மோசடி:---விபரமறியாத ரெயில்வே பிரயாணிகளிடம் அயோக்கியர் சிலர் டிக்கெட் வாங்கித் தருவதாகச் சொல்லி பணத்தையடித்துக்கொண்டு போவதுதான் வழக்கமாயிருந்தது. சிக்கனத்தை முன்னிட்டு டிக்கட்டின் அளவைக் குறைத்ததிலிருந்து அரை டிக்கெட், முழுடிக்கெட் என்றவிபரம் தெரியாதபடிக்கு பலர் ஏமாற்றப்படுவதாகத் தெரிய வருகிறது.

• •

மனிதருடைய உள்ளங்கை தோல், அவர்களுடைய கண் இமையைவிட 76 மடங்கு கனமாயிருக்கிறதாம்.

• •

டாக்டர் வாரனுப் என்பவர் நரம்பு ஒட்டு வேலையால் கிழவர்களைக் குமரர்களாக்குகிறார். தற்போது ஆட்டுமயிர் கிடைப்பது பிரான்ஸில் அரிதாயிருப்பதால் ஆங்குள்ள ஆடுகளின் ஆயுளையே விருத்திசெய்து நெடுங்காலம் வரைக்கும் அவைகளை வசிக்கச்செய்து வேண்டும் ரோமங்கள் அவைகள் கொடுக்க ஏற்பாடு செய்கிறாராம்.

* •

சென்ற மகா யுத்தம் நடக்கப் போவதைமுன்னதாகத் தெரிவித்த டாக்டர் மாகஸ்செம்மரிச் என்பவர் 1927 முதல் 1935 வரை வெள்ளையருக்கும், கருப்பருக்கும் பெரிய யுத்தம் நடக்கப் போகிறதென்றும், ஆனால் ஜெர்மனியின் உதவியால் வெள்ளையர் ஜெயித்து விடுவாரென்றும் சொல்லுகிறாராம்.

* *

இந்தியாவை இன்னும் 300 வருஷங்கள் வரை இங்கிலாந்து ஆளப் போகிறதென்று சொல்லப்படுகிறது.

## இராஜாவின் கோவில்.

9—10—26-ல் இவ்விடத்தில் பெரும் மழை பெய்ததன்றி பெரும் புயற்காற்றுண்டாகி சகல விதமான மரங்களாய் சுமார் 100 வரை வேருடனும் சின்னபின்னமாகவும் பூமியின் பேரில் வீழ்த்தியதன்றி சில வீடுகளின் மேற்கூரைகளையும் எடுத்தேகி விட்டது. என்னேவாயுவின் உக்கிரம்! என்று ஸ்ரீமான் ராம. செ. பொன்னமபலநாடார் எழுதுகிறார்.

## கஞ்சி குடித்தால் மிஞ்சின வயதுடன் வீற்றிருக்கலாம்.

## தூத்துக்குடி.

தூத்துக்குடி காரப்பேட்டை சபா மண்டபத்தில் தலைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் அவர்களின் ஞாபகார்த்தவாசகசாலையின் அங்கத்தினர்கள் மீட்டிங் 8—10—26 இரவு 8 மணிக்கு நடைபெற்றது. ஸ்ரீமான் சு. உ. வெற்றிவேல்நாடார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். பெரும்பாலான அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தனர். மெம்பர்கள் கொண்டுவந்த அநேக விஷயங்களில் முக்கியமான தீர்மானங்கள் சபையோரால் ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டன என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

## மதுரை, ஸ்ரீ மீனாட்சி ஊமைப்பிள்ளைகள் பள்ளிக்கூடம்.

இப்பள்ளிக்கூடத்தில் எல்லாவகுப்பு ஊமைப்பிள்ளைகளுக்கும் படிப்பு இலவசமாகக் கற்றுக்கொடுக்கின்றோம். ஏழைப்பிள்ளைகளுக்கு உணவும் உறைவிடமும் இலவசம். அவர்களைப் பேசவும் கணக்கு முதலியன செய்யவும் கற்றுக்கொடுக்கிறோம். இடம்:— மதுரை வடக்கு வெளிவீதி தமிழ் சங்கத்திற்கு எதிர் வீடு. மற்றும் விபரங்களுக்கு மானேஜருக்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

## திருட்டு.

பட்டுக்கோட்டையில் சென்ற 3–10–26–ல் சாத்தூர்தாலுகா ஏழாயிரம்பண்ணை சா. க. வன்னியநாடார் குமாரன் சங்கரலிங்கநாடார் என்பவர் எங்கள் வீட்டைத்திறந்து சுமார் ரூ 60 பெறுமான புதிய, பழய அலுமோனியப்பாத்திரங்கள், தொபித்தளை சமையல்பாத்திரங்களை திருடிக்கொண்டு தஞ்சாவூர் போய் அங்கே காங்கள் பற்றுவரவுசெய்யும் ஸ்ரீமான் மா. ம. மாயநாடார்அவர்களிடம் காங்கள் அனுப்பியதாகச் சொல்லி ரூ 13—1—0-க்கு சரக்கு வாங்கிக்கொண்டும் ஓடிவிட்டார். ஷை யார் இருக்குமிடம் தெரியவில்லை. சுமார் 5 அடி உயரமும் கொஞ்சம் கருவலான நிறமுடையவர். சுமார் ¼ அடி நீளம் மயிர் வளர்த்திருப்பார். மேற்கண்ட அடையாளமுள்ள சா. க. வ. சங்கரலிங்கநாடார் இருக்குமிடம் தெரிந்த கனவான்கள் அடியில் கண்ட எங்கள் விலாசத்திற்கு தயவு செய்துதகவல் கொடுக்கும்படியாய்கேட்டுக்கொள்கிறோம் என்று ஸ்ரீமான்கள் தி. ச. ச. திருக்கைவேல்நாடார், சி. ப. சிந்தாமணிநாடார் எழுதுகிறார்கள்.

## நோட்டீஸ்.

கோவில்பட்டி தாலுகா, தென்னம்பட்டிக் கிராமத்திலிருந்து இறந்துபோன ஷண்முகம் பிள்ளைக்கு பாத்தியப்பட்ட கொழும்பு நாஷனல் பாங்கில் டிபாஸிட்டிலிருக்கிற ரூ 350/-வாங்குவதற்காக ஷை இறந்துபோன ஷண்முகம் பிள்ளையின் வாரிசுகளாகிய மைனர் ஆதிநாராயணபிள்ளை ஷை வகையரா தூ. டி. மு. கோர்ட்டில் மனுதாக்கல் செய்து O. P. 80 of 26 ஆக பைலாகி 27-10-26க்கு நோட்டீஸுக்கு வாய்தா போடப்பட்டிருப்பதால் அது விஷயமாய் ஆக்ஷேபனை உள்ளவர்கள் ஷை தேதியில் பகல் 10-மணிக்கு ஷை தூ. டி. மு. கோர்ட்டில் வந்து ஆஜராகி தங்களுடைய ஆக்ஷேபனையைத் தெரிவித்துக்கொள்ளலாம்.

A. C. பால் நாடார்
B. A. B. L.
வக்கீல், தூத்துக்குடி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



நாடார்குலமித்திரன்

அக்ஷய ௵ அற்பிசி மீ ௨ உ

## நவம்பர் மீ 8 உ.

நவம்பர் மாதம் 8உ, நம் பாரதநாட்டுக்கு ஒரு சோதனை காலமென்று சொல்லப்படுகிறது. இந்தியாச்சட்ட சபை மற்ற மாகாணச் சட்டசபைத் தேர்தல்களெல்லாம் ஏககாலத்தில் வருவதாலும், இச்சந்தர்ப்பத்தில் வகுப்பு மதத் துவேஷங்கள் வலுத்துக் கொதிப்புக் கொண்டிருப்பதாலும் இத்தேர்தல்கள் நாடெங்கும் அமைதியுடன் நடக்குமாவென்றுகூட அனுமானிக்கலாம். ஏனெனில் தேர்தல் பிரசாரங்களை நடத்துந் தலைவர்களின் மனப்பான்மைகள் ஒருநிலையுற்றதாகக் காணப்படவில்லையென்றும், பச்சோந்தியைப் போல் அடிக்கடி மாறுஞ்சுபாவமுடையவர்களாயிருக்கிறார்களென்றும், பொதுவாக தேசத்தில் இன்னார்தான் குறிப்பிடத்தக்க தலைவரென்று ஒருவரையேனுங் கொள்ளமுடியவில்லையென்றுஞ் சொல்லப்படுகிறது. எந்தத்தலைவர் எங்கேபோய் வாய்திறந்தாலும் அதற்கெதிர்ப்பும், மறுப்பும், கல்மாரியும், மண்மாரியும் கிடைப்பதிற்குறைவேயில்லை. தேசப் பொதுமகா சபைக் கட்சித்தலைவராக விளங்கும் பண்டித் நேருவுக்கு அவர் பிறந்த ஊரிலேயே மறுப்பு மரியாதைகள் வெகு மனப் பூர்வமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. சபைத் தலைவராக வரப்போகும் ஸ்ரீநிவாசய்யங்காரைப்பற்றியோ சொல்லவேண்டியதில்லை. அலிசகோதார், பண்டிதமாளவியா, லாலாஜீ முதலியவர்கள்மதப்பிரசாரர்களாய் விட்டார்கள். சென்னையில் நடக்கும் சுயராஜ்யக்கட்சி, ஜஸ்டிஸ் கட்சி தேர்தல்கூட்டங்கள் தோறும் இசைமாறிய வசைமாரியும், கல்மாரியும் இடைவிடாது பொழியப்படுகின்றன. அக்காற்று மாகாணமெங்கும் பரவிவிடக்கூடாது. நிலைமை இவ்வாறிருப்பதினாலே இத்தேர்தல் எவ்வாறினிது நடைபெறுமென்று எல்லோரும் எதிர்பார்ப்பது சகஜமேயாம்.

எவ்வித சச்சரவுமின்றி எல்லாம் இனிது நடைபெறவேண்டுமென்று ஈசனை எல்லாரும் இறைஞ்சுவோமாக. இச்சந்தர்ப்பத்தில் நாடார் மகாஜனங்களுக்கு ஒன்று கூறுகின்றோம். உலகத்தையே சோதிக்கவெழுந்து சுழலும்காலச் சக்கரத்தில் நாடார் சமுகமும் சோதனைக்குட்படாமல் தப்பி ஒதுங்கியிருக்க முடியவே முடியாது என்பதை சில முக்கியமான நகரங்களில் நடந்த முனிஸிபாலிட்டி முதலிய ஸ்தல ஸ்தாபனத்தேர்தல்களிலிருந்து அறிந்து கொண்டோம். கொண்டாலுமென்ன! சோதனைக்காலன் அப்பக்ததிலிருந்து மீளவிட்டானில்லை. அப்பந்தமுடையவருக்கும் ஆதரவும், பாதுகாப்பு மளிப்பது நாடார் மகாஜனங்களுடைய கடமை யென்பதை நாம் சொல்லவும் வேண்டுமா?

அவ்வாறே நாடார் சமுகத்தவர்கள் முக்கியமாய் வசிக்கும் ஜில்லாக்களின் பிரதிநிதிகளாக சட்டசபைக்கு யார் யார் முன்வருகிறார்களென்று எதிர்பார்த்திருந்தார்கள். அதற்கிணங்க மதுரை ஜில்லாவுக்கு சிவகாசி ஸ்ரீமான் மொ. சி. ஆ. சிதம்பர நாடார் பி. ஏ. பி. எல். அவர்கள் காங்கிரஸின் சார்பாயும் ஷெ ஊர் ஸ்ரீமான் அருணாசலநாடாரவர்கள் இராமநாதபுரம் ஜில்லாவுக்கு சுயேச்சையாயும் நிற்கிறார்களென்றும் இருவர்கள் பெயர்களும் நன்றாயடிபட்டு வந்தன. இப்போது இருவரும் முன்வாராமல் மறைந்துவிட்டதற்கு என்ன காரணமென்று இன்னும் வெளிவரவில்லை. ஏதேனும் பேதியகாரணமிருக்கத்தான் வேண்டும்; அதைப்பற்றி இனிப் பேசுவதில் யாதும் பிரயோசனமில்லை. சொற்ப நாடார் ஓட்டர்களுள்ள மதுரை ஜில்லாவில் ஒரு நாடார் முன்னர் வெற்றி பெற்றிருந்தும் இம்முறை அவ்வகைக் கொருவரேனும் முன்வராமலிருப்பதற்கும், சுமார் பதினாயிரம் நாடார் ஓட்டர்களுள்ள இராமநாதபுரம் ஜில்லாவுக்கு மும்முறைத்தேர்தல்களிலும் நாடார்களில் ஒருவரும் முன்வாராமல் ஒருசில வகுப்பார் போட்டியின்றித் தேர்ந்தெடுபட்டு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கும்காரணங்களென்ன வென்பதை நாடார் சமுகம் சிந்தனை பண்ணாமலிருக்க முடியாது. சென்ற காரியத்தைப்பற்றிச்சிந்தித்தாலும்இன்னின்ன காரணங்களென்று ஒரு சாடையாக எண்ணினாலும் விசாப்பமும் மனவமைதிக் குறைவுமேயுண்டாகும். ஆகையால் இருஜில்லாவுக்கும் இரு பிரதிநிதிகள் இருஸ்தானங்களைப் பெறுவதில் முனையாதொழிய, இருபதினாயிரம் ரூபாய் லாபமென்ற ஒருவகையில் திருப்தியோடிருந்துவிட வேண்டியதைவிட்டு வேறென் செய்வோம்!

திருநெல்வேலி ஜில்லாவில் வெகு துணிவுடன் நிற்கும் ஸ்ரீமான் துரைச்சாமி நாடாரவர்களாவது வெற்றிபெற வேண்டுமென்று பிரார்த்திப்போம். அவர்களுக்காக வேலையும் செய்வோம். அவருக்கு ரெட்டியார், முதலியார், பிள்ளை ஆகிய மூன்று பேர்கள் போட்டியாய் நிற்கிறார்கள். ஆனால் ஒரு ஐயர் உதவியாய் நிற்கிறார்; என்றாலும், ஐயர்களுக்குள்ச் சற்றப்பயங் கிடக்கிறதென்றும், நாடார், ஐயர்களால் வஞ்சிக்கப் படுவாரென்ற வதந்தியும் பலமாயிருப்பதாகத் தெரிகிறது. அதை நாம் பூரணமாக நம்பவில்லை. ஒருக்கால் அப்படிச் செய்வார்களானால் பிராமணர் செய்யும் துரோகம் பெரிய துரோகம் என்ற தற்காலச் சோதிடம் உண்மையாகவே முடியும். அதனால் வரும் வினையை அவர்களனுபவிக்காமலொளிய முடியாது. தன் மரியாதையையும் தேசாபிமானத்தையும் தென்னாட்டுப் பிராமணர்கள் சரிவரக்காபாற்றுவார்களாவென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

திருநெல்வேலிஜில்லா நாடார்கள் ஒன்று பட்டுவேலை செய்வார்களேயானால் யாருடைய கபடமும் எவருடைய எதிர்ப்பும் பயன்படாதெனபது நிச்சயம். ஆறுமுகநேரி ஸ்ரீமான் பொன்னையாநாடார், காயாமொழி ஸ்ரீமான் ஆதித்த நாடார் வகையறாப் பேர்கள், கடயம் ஸ்ரீமான் தாலிங்குவேலி பொன்னையாநாடார், முக்கூடல் ஸ்ரீமான்கள் சொக்கலால், குமாரவேல் நாடார், மார்த்தாண்டம்பட்டி ஸ்ரீமான் இரத்தினச்சாமி நாடார் ஆகிய இக்கனவான்கள் முயற்சிசெய்தால் முடியாத காரியமுமொன்றுளதா? மதுரை நாடார் மகாஜன சங்கமும் தூத்துக்குடி வர்த்தகச் சங்கமும் ஸ்ரீமான் நாடாரின் தேர்தலைப் பற்றிய அறிக்கைகளை வெளியிட்டுசெய்திருக்கின்றன. இன்னும் மேலே நாம் குறிப்பிட்ட கனவான்களும் பொதுச் சபைகளும் தனித்தனி அறிக்கைகள் பிறப்பித்து தீவிரமான வேலைகளும் செய்வார்களென்றே பூரணமாய் நம்புகிறோம். இதுசமயம் கொளும்பிலுள்ள "இந்திய க்ஷத்திரியநாடார் சங்கத்தார்களும்" திருநெல்வேலிஜில்லா நாடார்களுக்கு "ஒரு வேண்டுகோள்" துண்டுப்பிரசுரத்தின் மூலம் தெரியப்படுத்துவார்களாகில் மெத்தவுமுபகாரமாயிருக்குமென்று நம்புகிறோம். இன்னும் இருபது நாட்கள் தானிருக்கின்றன. சோதனைகாலம் நவம்பர் மாதம் 8உ. இச்சோதனையில்நாடார்களுபிர்நாடி தளர்ந்து போகாமற் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பின் முக்கியாம்சம் திருநெல்வேலிஜில்லா நாடார்களைப் பொறுத்திருப்பதால் அவர்கள் எல்லோருமே ஒன்றுபட்டு தகுந்தபடி வேலைசெய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

அதுபோல் இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லா கிறிஸ்தவ கனவான்களும், நாடார் கிறிஸ்தவ நண்பர்களும், மிஸ்டர் பன்னீர்ச்செல்வம் அந்நிய ஜில்லாக்காரரென்று சொல்லி யனுப்பிவிட்டு ஸ்ரீமான் டானியல் தாமஸ்நாடாரையே தேர்ந்தெடுக்கும்படி கோருகிறோம். தூத்துக்குடியிலிருந்துவெளிவரும் "பாரதகுல மித்திரன்" நமது டானியல் தாமஸ்நாடாருக்கே ஓட் செய்யும்படி கத்தோலிக்கிறிஸ்தவ நண்பர்களுக்கு நன்குஎடுத்துரைத்திருக்கிறது. அவை மறுமுறை வெளிவரும்.

---

## ஸ்ரீமத் ஏனாதிநாதநாயனார் குருபூஜை.

இவ்வேனாதிநாதநாயனார் இன்றைக்கு சுமார் 150 வருடங்களுக்கு முன் சோழ தேசத்திலே எயினனூரிலே சான்றோர்களாகிய நாடார் குலத்திலே பிறந்தவர். இவர் மிகுந்த சிவபக்தராயிருந்தாலும் தம் குலத் தொழிலாகிய வாழ் வித்தையை விடாமல், அரசர்களுக்கு அவ்வித்தையை கற்றுக்கொடுத்து அதனால் வரும் ஊதியத்தை சிவனடியார்களுக்குக் கொடுத்து வந்தார். இவர், தாயாதிக்காரன் அதிசூரனால் வஞ்சகமாய் யுத்தகளத்தில் சிரசு துணிக்கப் பெற்று சிவபதமெய்தினரென்ற சரித்திரம் யாவருமறிந்த விஷயம்.

இவர் அரசகுலத்தவராயிருந்தும், அரசருக்கு வாள் வித்தை கற்றுக் கொடுக்கும் ஆசிரியராயிருந்தும், வாள் யுத்தம் செய்பவராயிருந்தும் மகாத்மாகாந்தி சொல்லும் அஹிம்சா தர்ம நெறியில் அணுவளவேனும் தவறாமல் அனுஷ்டித்திருக்கிறார். அதனாலேயே அவர் அரனடிக்காளாகினர். அதாவது:— அவருக்கு அதிசூரனைச் செயிக்கும் ஆற்றலிருந்தும், கூரிய வாள் கையிலிருந்தும், அன்று அதிசூரன் நெற்றியில் விபூதியைக் கண்டதும் சிவபக்தனைய் விட்டானென்று அவனுள்ளக் கருத்துக்கிசைய உயிர்விடத் தீர்மானித்ததும் தம்முயிர் போனாலும் போகட்டும் நிராயுதபாணியைக் கொன்ற தோஷம் அவனைச் சேராமல் போகட்டுமென்று கருதி எதிர்க்காமல் எதிர்த்து வாளையும், பரிசையையும் விடாமல் நின்ற சம்பவமும் மிகவுங் குறிப்பிடத்தக்கது; யாவரும் உணரத்தக்கது. சிவாலயங்கள்தோறும் இவர் சிலையையும் திருநாள்க் கொண்டாட்டத்தையுங் காணலாம்.

இவ்வுத்தம பக்தர் முத்திபெற்ற திருநாள் புரட்டாசி மீ உத்திராட நட்சத்திரமே. அவர் குலத்தவராகிய நாடார்களில் அநேகர் அவர் முத்தி பெற்ற திருநாளைக் கொண்டாடிக் குருபூஜை முதலியவைகள் இன்னும் நடத்திவருகிறார்கள். முத்துப்பேட்டையில் விசேஷமாய்க் கொண்டாடி வருவதாகத் தெரிகிறது. நம்மருப்புக்கோட்டையில் 25 வருஷங்களாக வெகு சிறப்புடன் நாடார்கள் பொதுவில்நடந்து வருகிறது. ஏனாதிநாதநாயனார் திருமடாலயமும் ஒன்று கட்டப்பெற்றிருக்கிறது. இக்குருபூஜையன்று அன்னதானமொன்றுஞ் செய்யப்பெற்றுவருகிறது அதற்கு வேண்டிய உப்பு முதல் கற்பூரம் வரையுள்ள சகல சாமான்களும் நாடார்கனவான்களால் உபயமாகக் கொடுக்கப்பட்டுவருகின்றன. இவ்வன்னதானம் வரவா விருத்தியாகிக் கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் புரட்டாசி மீ 29 உ. யன்று நாடார்கள் சிங்காரத்தோப்பில் காலை 10மணிக்கு ஏனாதிநாதநாயனார் அபிஷேக ஆராதனைகள் நடத்தி அடியார்கட்கும் மற்றும் பக்துஜனங்களுக்கும் மாலை 5-மணி வரையும் பந்தி போஜனம் நடந்தது. மொத்தம் சுமார் 8000 ஜனங்கள்வரையும் சாப்பிட்டிருப்பார்களென்றுமதிப்பிடப்படுகிறது. இன்றிரவு ஏனாதிநாதநாயனார் திருமடாலயத்தில் கோவில்பட்டி நாவலர் ஸ்ரீமான் கணபதி நாயுடு அவர்களால் நந்தன் சரித்திரம் காலக்ஷேபம் நடைபெறப்போகிறது. நாவலர் இன்னிசையும், பக்கப் பாட்டும், ஹார்மோனிய நாதமும் ஜனங்களை ஆனந்தக் கடலிலமிழ்த்தி விடுமென்பதற் கையமில்லை.

இப்பெரிய காரியத்தை முன்னின்று நடத்தும் நாடார் குலமணிகளாகிய ஏனாதி யன்பர்கள் இன்னுமிக் குருபூஜையை விசேஷ விருத்தியுடன் நடத்தவும், நாயனார் திருமடாலயத்தை இன்னும்மேலானதாகக் கட்டி முடிக்கவும், அடியார்பணியேற்கவும் மிகுந்த ஆவலுள்ளவர்களாயிருந்துவருகிறார்கள். வீரர் குலத்தில் ஜெனித்து சதா வீரர் கூட்டங்களினிடையே வசித்து வீரவாள் வித்தை பயிற்றுவித்த வீரர் ஏனாதிநாயனார் மரபாகிய நாடார்கள் என்றும் எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் வீரம் குன்றாமல் ஸ்ரீமத் ஏனாதிநாதநாயனாரின் அஹிம்சா தர்மத்தை இருதய கமலத்திருத்தி சிந்தனை செய்தவர்களுக்கும் வந்தவினை தீரட்டுமென்று பகவானைத் துதித்துக் கோரிய கர்மம் நிறைவேற வேணுமென்று சதா கடவுளைத் துதித்தானந்திப்பார்களாக.

---

# குறிப்புகள்.

## ஸ்ரீமான் ராமமூர்த்தி.

இவர் இராமநாதபுரம் ஜில்லாவில் சுமார் 3, 4 வருஷங்களாகக் கலெக்டர் உத்தியோகம் பார்த்துவந்திருக்கிறார். இவர் வந்த சமயம் இவருடைய பரபரப்பைக் கண்டு கீழுத்தியோகஸ்தர்களெல்லாம் நடுக்கம் கொண்டார்கள். என்றாலும் பின்னர் வர வர இவருடைய மாசற்ற ஆட்சி முறையையும்; இவருக்குள்ள மிகுந்த உண்மையான தேசப் பற்றையும், சமரச வுணர்ச்சியையுங் கண்டு எல்லோரும் திக்பிரமையை நீக்கிக் கொண்டதுடன் நியாயமான ஆட்சி முறையே உத்தியோகத்திற் கழகு தருமென்பதை அதிகமாக உணர்ந்து திருந்திக் கொண்டார்களென்று சொல்லப்படுகிறது. ஜனங்களும் அச்சமுற்று தங்களுக்குள்ள குறைகளை அவர் பால் தெரிவித்துக் கொள்ளக் கற்றுக் கொண்டார்களென்றும் சொல்லலாம். இவ்வுத்தமர் (ராமமூர்த்தி) அருப்புக்கோட்டையிலுள்ள பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் ஸ்கூலைத் திறந்து வைப்பதற்காக 15—10—26-ல் வருகிறாரென்று கேள்விப்பட்டவுடனே நகரெங்கும் மிக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஜனங்களும் ஆனந்தக் களிப்பிலமிழ்ந்திருந்தார்கள். நாடார்கள் கடைத்தெருவில் விசேஷ அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. சரியாய் மாலை 5-மணிக்கு நகரத்துள் மோட்டார் வாகனத்தில்வந்து சேர்ந்தார்கள். முதலாவது, முதலாளி மு. மு. முத்துச்சாமி நாடார் ஞாபகார்த்த வாசகசாலை மெம்பர்கள் வாகனத்தை வாசகசாலை முன்னிறுத்தி மாலை போட்டார்கள். வாசகசாலையின் பூர்வ சரித்திரங்களை வெகு கவனமாய்க் கேட்டுக் கொண்டார். பின்னர் நாடார் தர்மபரிபாலன சபை முன் நாடார்கள் பொதுவில் வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்திற்கும் அன்புடன் பதிலளித்தார். அவ்விடம் விட்டுச் சென்றதும் மழை பலமாகப் பெய்தது; என்றாலும் பின்னர் நடக்க வேண்டிய காரியங்களெல்லாம் ஒழுங்காய் நடந்து முடிந்து விட்டன. விசேஷ சிரத்தையுடன் எதிர் கொண்டழைக்கக் காத்திருந்த பலர் மழையால் சிறிது ஏமாற்றமடைந்து விட்டார்களாயினும் அவர் வருகையை முன்னிட்டுப் பொழிந்த மழை எல்லோருடைய மனதையும் குளிரச் செய்து விட்டது.

## நாடக ராஜா.

சங்கீத வித்வ ரத்தினம் விருதுநகர் நமது சின்னமணிப் பாகவதர் கொளும்புக்குப் புறப்பட்டுச் செல்லுவதாக நமக்கு அறிவித்திருக்கிறார். முன் முறை யின்னவரை ஆதரித்தனுப்பிய நாடகாபிமானிகள் இம்முறையும் ஆதரித்துக் கௌரவப்படுத்துவார்களென நம்புகிறோம்.

## மித்திரன் க்ஷேம நிதி.

லாட்டரிப் புஸ்தகம் வேண்டியவர்களுக்கும், அனுப்ப வேண்டியவர்களுக்கும் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஒரு மாதத்துக்குள் எல்லாம் அனுப்பியாய்விடும். வேண்டிய புஸ்தகங்களுக்கு எழுதியனுப்பும்படி வேண்டுகிறோம்.

## ஆகா! இதென்ன காருண்யம்.

இங்கிலாந்தில் ஆடு மாடுகளை அடித்துச் சாப்பிடும் வழக்கத்தை நிறுத்த முடியாதாம். பிரதிதினமும் 30 ஆயிரம் மிருகங்கள் கொல்லப்படுகின்றனவாம். இம்மிருகங்கள் கத்தியால் வெட்டப்படும் போது சில சமயங்களில் பல வெட்டுகள் விழுந்தாலும் சாவதில்லையாம். வெட்டுண்டுசெத்த மிருகங்களைச் சோதித்துப் பார்த்த பொழுது 100 மிருகங்களில் 174 வெட்டுகள் தென்பட்டனவாம். இது அநாவசியமான கொடுமையென்று மிருகங்களைக் கொல்லுமுன் அவற்றிற்கு புத்திஸ்வாதீனமில்லாமல் ஒரு இயந்திரத்தின் மூலம் செய்துவிட வேணுமென்று சுகாதார மந்திரி சொல்லியிருக்கிறாராம். அம்முறையே செம்முறையென்ற பிரசாரம்நடக்கின்றனவாம். கஷாப்கடைகளில் ஜீவகாருண்ய முறையை அனுசரித்துக் கொல்லப்பட்ட மிருக மாம்சம் விற்கப்படும் என்ற பலகைகள் இப்போது தொங்குகின்றனவாம். ஆகா! இது என்ன காருண்யம், தன்னைக் கொன்றவன்பால் நிராயுதபாணியைக் கொன்ற தோஷம் பரவாமல் எதிர்க்காமல் எதிர்த்த ஞெறி நாயனுருலகத்துக்கும் இவ்வியந்திரவுலகத்துக்கும் எவ்வளவுதூரம்!

---

# சென்னை சட்டசபை.

## ஸ்ரீமான் துரைச்சாமி நாடார் அவர்களுக்குப் பேராதரவு.

### குலாபிமானிகள் பிரசாரத்திற்கு முன் வரவேண்டும்.

**நாடார் மஹாஜன சங்கம், மதுரை.**

ஐயா!

நிகழும் 8-11-26ல் நடைபெறும் சென்னை சட்டசபை எலக்ஷனுக்கு திருநெல்வேலிஜில்லா கிராமாந்தரத் தொகுதிக்கு ஸ்ரீமான் அரி. அ. சு. துரைசாமிநாடார் அவர்கள் ஓர் அபேட்சகராக முன்வந்திருப்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

திருநெல்வேலி ஜில்லாவில் கடந்த இரண்டுதடவைகளில் நடந்த எலக்ஷன்களில் நம்குலத்தவர்கள் நின்றும் நம்குலப்பிரதிநிதியாக சட்டசபையில் ஸ்தானம்பெறாது போனபடியால் ஷை ஜில்லாவில் நம்மவர்களின் கல்வி, இராஜீய சுதந்திரம் முதலிய விஷயங்களை எடுத்துப்பேசுவதற்கும், விருத்தி யடைவதற்கும் போதுமான வழியேற்படாது போய் விட்டது.

ஷை விஷயங்களை செவ்வனே சீர்தூக்க எண்ணங்கொண்டு, இந்த வருஷம் நமது குலாபிமானியும், சதுர்வித சாமர்த்தியம் வாய்ந்தவரும், இராஜீய தேசிய வாஞ்சையுடையவருமான ஸ்ரீமான் அரி. அ. சு. துரைசாமிநாடார் அவர்கள் அபேக்ஷகராக நிற்கிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லா கிராமாந்திரங்களிலுள்ள நம்குல ஓட்டர்கள் எல்லாரும் தீவிரமான முயற்சிகள் செய்து உற்சாகத்துடன் ஜெயம்பெறுவதற்கான வழியில் தங்கள், தங்கள் ஓட்டுகளை அன்னவருக்கே போடவேண்டியதும், மற்றும் தங்கள் சிநேகிதர்களையும் தவறாமல் அன்னவருக்கே ஓட்டுச் செய்யும்படி பிரயத்தனங்கள் செய்ய வேண்டியதும் நம்மவர் கடமைதான் என்பதை உணர்ந்து அன்னவருக்கே எலக்ஷன் சித்திபெறச்செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எலக்ஷன் தேதியில் நம்குலத்தவர் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட போலிங் ஸ்டேஷனுக்கு தவறாமல் போய் ஓட்டுகளை ஸ்ரீமான் அரி. அ. சு. துரைசாமிநாடார் அவர்களுக்கே போடும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பா. ம. பாண்டியநாடார்,
ஆ. அ. ஆறுமுகநாடார்,
காரியதரிசிகள்.

---

**இந்திய வியாபாரச் சங்கம், தூத்துக்குடி.**

இந்தியன் சேம்பர் ஆவ் காமர்ஸ் என்னும் நமது வர்த்தக சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர்களிலொருவரான ஸ்ரீமான் அரி. அ. சு. துரைசாமி நாடார் அவர்கள்திருநெல்வேலிஜில்லா கிராமாந்தரத்தொகுதிக்கு சென்னைசட்டசபை அபேக்ஷகராக முன் வந்திருப்பது யாவரும் தெரிந்த விஷயமே. நமது சங்கத்தின் அங்கத்தினரனைவரும் தங்களுக்குரிய வோட்டுகளை அவருக்கு வழங்குவதுடன் சங்கனாவியன்ற உதவிகளையும் புரிய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அபேக்ஷகர் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைசாமிநாடார் அவர்கள் பொதுஜன ஊழியத்தில் ஆர்வமிக்க ஓர் தேசாபிமானியாவர். அன்றியும் நமது சங்கத்தின் அபிவிர்த்தியில் மிகுந்த அக்கரையுடையவர். வர்த்தக சமூஹத்தினரது நலவுரிமைகளில் சிரத்தையுடையவர். தேச நன்மையின் பொருட்டு உழைத்துவரும் தியாகபுருஷர். இத்தகைய பெரியாரை நமது ஜில்லாவின் பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்தனுப்புவதை நமது கடமையாகக் கருதவேண்டும். இந்த ஜில்லாவிலுள்ள வர்த்தக சமுதாயத்தவரது நன்மையை உத்தேசித்தே இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்பதை மறந்துவிடக்கூடாது. அங்ஙனமாயின், நமது ஜில்லாவிலுள்ள வர்த்தகர்கள் மட்டுமல்ல, அவர்களை அநுசரித்திருக்கும் விவசாயிகளும், தொழிலாளர்களும் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைசாமிநாடார் அவர்களுக்கே தங்களுடையவும், தங்கள் நாட்டினுடையவும், க்ஷேமத்தைக் கருதி தங்களுக்குரிய வோட்டுகளை வழங்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பது சொல்லாமலே விளங்கும். ஆதலின், ஜில்லா வர்த்தகர்கள் அனைவரும் தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி நமது ஜில்லாவிலுள்ள வியாபாரிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியோர் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைசாமிநாடார் அவர்களுக்கே தங்களுடைய வோட்டுகளை வழங்குமாறு முயன்று சங்கத்தினதும், தேசத்தினதும் நன்மையை நாடும்படிக்குக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தேர்தல்தினம்1926-ஞு நவம்பர்மீ 8௳

வ. த. வே. தர்மப்பெருமாள்பிள்ளை,
பிரசிடெண்டு.

விக்டர் பர்னாந்து, B. A.
உதவிக் காரியதரிசி.

---

**நாடார் மஹாஜன சங்கம், மதுரை.**

ஏழைமாணவர்ஸ்காலர்ஷிப்லாட்டரி.

பிரைஸ் ஜாபிதா, வெகு துரிதமாக தயாராகிக்கொண்டிருக்கிறது. தயாரானவுடன் இரண்டு புஸ்தகங்கள் விற்பனை செய்தனுப்பியவர்களுக்கும், ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பியிருக்கும் புள்ளிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும். அதுவரை எல்லோரும் பொறுத்திருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

காரியதரிசிகள்.
பா. ம. பாண்டியநாடார்,
ஆ. அ. ஆறுமுகநாடார்.

---

சுத்தக் கதருடுத்தி ஏழைகள் துயர் தீருங்கள்.

இந்தியர் வறுமையை ஓட்டுங்கள்.

நாட்டுக்கும், நமக்கும் நற்பெருமை கொடுங்கள்.

---

# ஆங்கிலேயர்கள் இந்தியாவை இழப்பதனால் வரும் நஷ்டம்.

(நமது ராஜீய நிருபர் எழுதுகிறார்)

மகமதியர் ஆட்சி ஒய்ந்து மூகலாயர் ஆட்சிக்குப் பின், பிரிட்டிஷார் இந்தியாவை ஆண்டுகொண்டிருப்பது இற்றைக்குச் சுமார் 150 வருடங்களாகும். ஒன்றரை நூற்றாண்டாக இந்தியர்கள் ஆங்கிலேயர் கைக்குள் இருந்து வருவதனால் இந்தியர்கள் அடைந்துள்ள சில நன்மைகளைக் காட்டிலும் ஆங்கிலேயர்கள் அதிக நன்மை அடைந்திருக்கலாம். இந்தியாவை ஆளுவது ஆங்கிலேயர்களின் நன்மைகளின் பொருட்டல்ல; இந்தியர்களை நாகரீகப் படுத்த ஆளுவது வாஸ்தவமானால், இந்தியர்களைக் காட்டிலும் அநாகரீகர்கள் இவ்வுலகின் பல்வேறு பாகங்களில் இன்றுமுள்ளார்கள்; அவர்களையும் இந்தியர்களைப்போல் ஆளப் பிரியப்படலாமே. உலகத்திலேயே கைத்தொழில் முதலியவைகளுக்கு மூலப் பொருள்கள் நிறைந்ததும் உணவுப் பொருள்கள் விளையும் மகா செழிப்புள்ள விவசாய அபிவிருத்தியுள்ளதுமான இந்தியாவை ஆட்சி செய்வது பிரிட்டிஷாருக்கே பெரும் பர்லும் நன்மை யென்று பல மேதாவிகள் பற்பல மேற்கோட்களால் இன்றும் என்றும் விளக்கி வருகிறார்கள். சாதி மத வித்தியாசங்களை நீக்கி ஒற்றுமைப்பட்டு அந்நியர் ஆட்சியினின்று விடுதலையடைந்து சுயராஜ்ய வாழ்வு பெறுவார்களானால்பின் கண்ட இனங்களில் லாபமடையக் காரணமாயிருக்கிறதென்றும் அதே சமயத்தில் ஆங்கிலேயர் நஷ்டமடைய வேண்டிய திருப்பவைஇன்னின்னதென்றும் "தமிழ் நா"டில் ஒரு நிருபர் பின் வருமாறு எழுதுகிறார். அதாவது:—

பிரிட்டனின் பாங்கிகள் மூலமாய் மட்டில் வருஷத்திற்கு வட்டி மட்டில் 5 கோடி டாலர்கள்வருகின்றன. பிரிட்டிஷ் கப்பல்கள் இந்தியாவில் செய்யும் வியாபாரத்தினால் 14 கோடி டாலர்கள் அடைகிறார்கள். இந்தியாவில் ரயில் வேக்கள், டிராம்வே, சுரங்கம், காபித் தோட்டங்கள் இவைகளுக் குள்ளேற்பட்ட 3 கோடி டாலர்கள் முதலின் பேரில் 18 கோடி டாலர்கள் அடைகிறார்கள். அரசாங்க உத்தியோகத்தில் 15000 பேர் ஆங்கிலர்கள். இவர்களுக்கு ஏராளமான வருமானம் கிடைக்கிறது. ராஜப்பிரதிநிதிக்கு சகல செலவுகளும் தள்ளி வருஷம் 270000 கிடைக்கிறது. சகல செலவுகளுடன் 400000 ஆகிறது. அவருடைய நிருவாக அங்கத்தினர்கள் சீமை காபினட் அங்கத்தினருக்கு இரண்டு பங்கு வாங்குகிறார். இந்திய சேனாதிபதிக்கு 2000, மாகாண கவர்னர்களுக்கு வருஷத்திற்கு 22000 சவரனிலிருந்து 42000 வரை. கவர்னருடைய அங்கத்தினருக்கு 21000 சவரன். ஹைகோர்ட் நீதிபதிகளுக்கு 16000 சவரன். மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு 9000 சவரனிலிருந்து 15000 பவுன் ஆகிறது.

இன்னும் பென்ஷன் பெற்று இங்கிலாந்திற்குத் திரும்பும் உத்தியோகஸ்தர்கள் ஏராளமாய் அடைகிறார்கள். இதனால் இந்தியா இங்கிலாந்தை விட்டுப்பிரிந்தால் ஏராளமாய் நஷ்டமடையும் என்று சுலபமாய் சொல்லிவிடலாம். சுரங்கங்கள் பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கு அதிகமாய் விடப்படமாட்டாது. இங்கிலீஷ் அல்லாத வெளிதேச முதலும் அனுமதிக்கப்படும். ஒரு தேசீய ஆட்சி தனது தனம் வெளிதேசத்திற்குப்போவதை தடுக்கும் தற்போது வெள்ளையர் அடைந்திருக்கும் உத்தியோகத்தில் பெரும் பாகம் இந்தியமயமாகும். மிகுந்திருப்பதும்பிரிட்டிஷாருக்கே கிடைக்காது. ஆனால் பல தேச நிபுணர்களுக்கும் பங்காகும். இதனால் ஏராளமாய் பிரிட்டன் நஷ்டமடையுமாதலால் எதிர் பாராத கேடு விளைந்தாலன்றி இந்தியரில் வைத்திருக்கும் பிடியைவிட சம்மதியாது.

# சென்னை மாகாண 1921 ஹூத்திய ஜனக்கணித ஆராய்ச்சி.

(முன் தொடர்ச்சி.)

| | |
|---|---|
| அகமுடையர் மொத்தம் | 368639 |
| ஆண்கள் மொத்தம் | 179804 |
| " படித்தவர்கள் | 37315 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 1289 |
| பெண்கள் மொத்தம் | 188835 |
| " படித்தவர்கள் | 1604 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 23 |

இச்சாதி ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 21 வீதமும், பெண்களில் படித்தவர்கள் 100-க்கு ⅞வீதமுமாகும். இருபாலர்களிலுமாக சேர்த்து கணித்தால் ஏறக்குறைய 100-க்கு 11 பேர்களாகிறது.

வண்ணர் (ஏகாலி)

| | |
|---|---|
| மொத்தம் | 250557 |
| ஆண்கள் மொத்தம் | 126403 |
| " படித்தவர்கள் | 9907 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 144 |
| பெண்கள் மொத்தம் | 124154 |
| " படித்தவர்கள் | 645 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 10 |

இச்சாதி ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 7 வீதமும் பெண்களில் படித்தவர்கள் 100-க்கு ½ வீதமும் இருபாலரும் சேர்த்து சுமாராகக் கணக்கிட்டால் 100-க்கு 4 வீதமுமாகிறது.

அம்பட்டர் (நாவிதர்)

| | |
|---|---|
| மொத்தம் | 227224 |
| ஆண்கள் மொத்தம் | 111619 |
| " படித்தவர்கள் | 16767 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 241 |
| பெண்கள் மொத்தம் | 115605 |
| " படித்தவர்கள் | 953 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 25 |

இச்சாதி ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 15 வீதமும் பெண்களில் படித்தவர்கள் 100-க்கு ஒன்று வீதமும் இருபாலர்களிலும் சேர்த்து படித்தவர்களை கணித்தால் ஏறக்குறை 100-க்கு 8 வீதமுமாகிறது.

| | |
|---|---|
| வாணியர் மொத்தம் | 200507 |
| ஆண்கள் மொத்தம் | 100429 |
| " படித்தவர்கள் | 29950 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 1121 |
| பெண்கள் மொத்தம் | 100078 |
| " படித்தவர்கள் | 1225 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 61 |

இச்சாதி ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 30 வீதமும் பெண்களில் படித்தவர்கள் 100-க்கு 2 வீதமும் இருபாலரும் சேர்த்து படித்தவர்களைக்கணிக்கும் போது 100-க்கு 16 வீதமுமாகிறது.

| | |
|---|---|
| அம்பலகாரர் மொத்தம் | 164748 |
| ஆண்கள் மொத்தம் | 81150 |
| " படித்தவர்கள் | 6075 |
| ஆங்கிலம் படித்தவர்கள் | 77 |
| பெண்கள் மொத்தம் | 83598 |
| " படித்தவர்கள் | இல்லை |
| " ஆங்கிலம்படித்தவர்கள் | இல்லை |

இச்சாதி ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 7. பெண்களில் படித்தவர்கள் இல்லை. இருபாலர்களிலும் சேர்ந்து படித்தவர்கள் ஏறக்குறைய 100-க்கு 3½ வீதமாகிறது.

| | |
|---|---|
| துயவர்கள் மொத்தம் | 157973 |
| ஆண்கள் மொத்தம் | 78897 |
| " படித்தவர்கள் | 9318 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 113 |
| பெண்கள் மொத்தம் | 79076 |
| " படித்தவர்கள் | 343 |
| " ஆங்கிலம்படித்தவர்கள் | இல்லை. |

இச்சாதி ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 12 வீதமும், பெண்களில் படித்தவர்கள் 100-க்கு அரை பேருக்கும் குறைவாகவும் இருக்கிறது. இருபாலரையும்சேர்த்துப் பார்த்தால் 100-க்கு 6 பேராகிறது.

| | |
|---|---|
| குறவர் மொத்தம் | 132365 |
| ஆண்கள் மொத்தம் | 68295 |
| " படித்தவர்கள் | 3783 |
| " ஆங்கிலம் படித்தவர்கள் | 145 |
| பெண்கள் மொத்தம் | 64070 |
| " படித்தவர்கள் | 190 |
| " ஆங்கிலம் படித்தவர் | 1 |

இச்சாதி ஆண்களில் படித்தவர்கள் 100-க்கு 6 பேர்களும் பெண்களில் படித்தவர்கள் 100-க்கு கால் பேர்க்கும் குறைவாயுமிருக்கிறது. இருபாலரையும் சேர்த்து பார்த்தில் 100-க்கு 3 பேராகிறது.

(தொடரும்)

P. Tr.

# நோட்டீஸ்.

இராமநாதபுரம்ஜில்லா பள்ளிமடம்தாலுகா அருப்புக்கோட்டையில் நெல்,எண்ணெய்முதலிய வியாபாரம் செய்து வந்த ம. பச்சைநாடார் குமாரர்கள் ம. ப. சங்கரலிங்கநாடார் 1 ஷை தம்பி பழனிச்சாமிநாடார் 2 பேர்களும் நாளது அக்ஷய வருஷம் சித்திரைமாசத்தில் ஏதோ கெட்ட எண்ணங்கொண்டு வியாபாரத்தையும் நிலுவை செல்லும்புள்ளிகளையும் கவனியாமல் திடீரென்று எங்கேயோ போய் தலைமறைவாய் இருந்து கொண்டார்கள். இது விவரம் நாங்கள் வகையரா கிரடிட்டர்களுக்கு தெரிந்து, நாங்களும்ஷை ம. ப. ச. & ப கடைக்காரியம் பார்த்துவந்த ம. ச. மீனாக்ஷிசுந்தரநாடாரும், ஷை அருப்புக்கோட்டையில் மு. மு. முத்துக்குமாரஸாமிநாடாரவர்கள் 1, ப. உ. ஆ. சிதம்பரநாடாரவர்கள் 2, ப. க உ. அய்யாச்சாமி நாடாரவர்கள் 3, பெ. பழனிச்சாமி நாடாரவர்கள் 4, ச. க சு. துரைச்சாமிநாடாரவர்கள் 5, இந்த ஐந்து பேர்களையும் டிரஸ்டிகளாக நியமித்து 14—6—26-ல் 12 அணு ஸ்டாம்பில் ஓர் முச்சலிக்கா எழுதிக்கொடுத்தும் சாமான் சரக்குகளை ஒப்புவித்தும் ஷையார்களும் கிரடிட்டர்களும் சேர்ந்து சரக்கு சாமான்களை விற்பனை செய்து ஷை ம. ப. ச. & ப. கணக்கில் கண்ட எல்லா கிரடிட்டர்களுக்கும் ஷை தொகைகளை ஈவித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை முச்சலிக்காவின் சாத்துப்படி 14—6—26-க்குள் ஷையார்கள் வராமல் இன்னமும் மறைந்து கொண்டிருப்பதால் கிரடிட்டர்கள் பாக்கிகளை வசூலிக்கும் விஷயமாய் கோர்ட்டு மூலம் விவகாரத்துக்குப்போனால் கஷ்டநஷ்டம் வருமென்பதையும் தொகைகுறைந்து போகுமென்பதையும் உத்தேசித்து 10—11—26 வரை நிறுத்திவைத்திருக்கிறோம், ஷைதேதிக்குள் ஷை ம. ப. சங்கரலிங்கநாடார், & பழனிச்சாமி நாடார் இவர்கள் வந்து ஒழுங்கு பண்ணி கிரடிட்டர்களாகிய எங்கள் வகையறாவுக்கு பாக்கித் தொகையை கொடுக்காத பக்ஷத்தில் ஷையார்களை எதிர்பாராமலே கோர்ட்டுமூலம் இன்ஸால் வென்ஸியாக்கி ஷையார்களுடைய ஸ்தாவரசங்கம சொத்துக்களையும் இன்னும் மறைவுதல் செய்திருக்கும் பொருள்களையும்இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குக் கொண்டுவந்து வசூலிக்க உத்தேசித்திருக்கிறோமென்பதை இதன் மூலம் தெரிவித்திருக்கிறோம்.

தெ. சி. கா. பெரியசாமிநாடார் பிரதர்ஸ்,
தெ. சி. கா. மாரியப்பநாடார்,
கு. சி. ரா. அ. ரெங்கசாமிநாடார்,
ஷை அ. அய்யம்பெருமாள் நாடார்
தம்பி—நாமாக்ஷி நாடார்,
விருதுநகர்.
மு. பெ. முத்துமாலைநாடார்,
பெ. பழனிச்சாமிநாடார்,
வ. சுந்தரச்சாமிநாடார்,
அருப்புக்கோட்டை.

நாடார் கனவான்களே! இதை வாசியுங்கள்.

## கருப்புக்கட்டி கமிஷன் & பார்வேடிங் ஏஜென்ஸி லிமிட்டட், திருநெல்வேலி.

மூலதனம் ரூ 300000 (மூன்று லட்சம்) பங்கு 1-க்கு ரூ 10

இக்கம்பெனி கவர்ன்மெண்டு சட்டப்படியும், இந்தியன் கம்பெனி ஆக்ட்பிரகாரமும் 1925-ம் வருஷம்ஜூலை மீ 1உ ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலையும் ஆரம்பிக்கப்பட்டது.

1926-ம் வருஷம் ஆகஸ்டு மீ 16 உ முடிவாக 13½ மாதத்திற்குரிய கணக்குகளை கவர்ன்மெண்டு செர்டிபைபிட் ஆடிட்டர் அவர்கள் சோதித்து, கோஷ்பாரு கணக்கும், லாப நஷ்டக் கணக்கும் போட்டிருக்கிறார்கள். ஷை கணக்கின்படி நாளது வருஷத்தில் இக்கம்பெனியில் ரூ 47322-5-0-க்கு சரக்குகள் வாங்கி கமிஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வருஷத்தில் வட்டி ரூபமாயும் கமிஷன் ரூபமாயும், டிஸ்கவுண்டு ரூபமாயும் கிடைத்திருக்கும் மொத்த வருமானம் ரூ 4154-2-0.

கம்பெனிக்கு, இது முதல் வருஷமாக இருப்பதாலும் நமக்கு முன்னதாகவே பல வருஷங்களாக இவ்வியாபாரம் செய்து வருகிறவர்களுடன் நாம் போட்டிபோட்டு வேலை செய்ய வேண்டிய திருந்தமையாலும், வசூலிக்கப்பட்ட மூலதனம் குறைவாக இருப்பதாலும், இவ்வியாபாரத்தை ஸ்திரப்படுத்தி கம்பெனியை முன்னுக்குக் கொண்டுவரும் பொருட்டு செலவுகள் அதிகமாக ஏற்பட்டதினாலும் அதிக லாபம் கிடைக்க ஏதுகாமில்லாமல் போயிற்று.

இக்கம்பெனிக்கு அதிகமாக கருப்புக்கட்டி ஏற்றுமதிசெய்யும் நாசரேத்து ஊரிலும், திருவனந்தபுரத்திலும் பிராஞ்சு ஆபீஸ்கள் இருப்பதுடன், தூத்துக்குடியிலும் கமிஷன் அண்டு பார்வேடிங் டிப்பார்ட்மெண்டுகள் ஏற்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

கம்பெனியின் மூலதனம் கொஞ்சமாகஇருப்பதினால், வியாபாரம் விரிவாக நடக்கும் பொருட்டும், வந்த ஆர்டர்களுக்கு அனுப்பும் பொருட்டும், கொஞ்சம் கடன்வாங்கி யிருக்கிறது. கம்பெனியின் மூலதனம் வியாபாரத்திற்குத் தோதாக விருத்தியாகி இருந்தால், கடன்களுக்கு செலுத்தும் வட்டிகள் எல்லாம் பங்காளிகளுக்கே லாபம்ஆகும். ஆகையால் தக்க லாபம் அடையக்கூடிய இந்தக் கம்பெனியில் நமது நாடார்நண்பர்கள் யாபேரும் அவரவர் வன்மைக்கும் தன்மைக்கும் தக்கவாறு பங்குகள் எடுத்தும், பங்குகள் எடுக்கமற்றவரைத்தூண்டியும் கம்பெனியின் நன்னோக்கம் சித்தியடையுமாறு உதவிபுரிய அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம். கம்பெனியில் பங்குகள் எடுக்க விரும்புவோர் கம்பெனியின் அஸிஸ்டண்டு மானேஜிங்டைரக்டர் அவர்களுக்கு அப்ளிக்கேஷன் பாரம், மற்றும் விபரம் அனுப்பும்படி எழுதி இனமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

N. B. இக்கம்பெனியின் அஸிஸ்டண்டு மானேஜிங்டைரக்டர் மகா-ா-ா-ஸ்ரீ T. S. தாஸன் நாடார் அவர்கள் B. Sc, F. S. Sc, F. I. C. A. கம்பெனியின் பங்கு விஷயமாக இலங்கைத் தீவில் பல இடங்கள் போய் நாடார் மகான்களைக் கண்டுபேசி ஏற்பாடுகள் செய்ய இலங்கைக்கு வந்திருப்பதால் ஷையார்களுக்கு வேண்டிய உதவிபுரிந்து அவர்கள் வரும் நோக்கத்தை சித்தியடையச்செய்து அனுப்பும்படி இலங்கை வாழ் நாடார் கனவான்களை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்களை முகதாவில் கண்டு கம்பெனியைப் பற்றியும் மற்றக்காரியங்களையும் அறிய விரும்புவோர் ஏற்கனவே அவர்களுக்குத் தங்கள் விலாசத்தை எழுதி ஏற்பாடு செய்துகொள்ளவும். அவர்கள் கொழும்பு விலாசம்:—

c/o The Secretary, Y M C A
Fort, Colombo.

சுத்தக்கதர் உடுத்துங்கள், கை இராட்டினம் சுற்றுங்கள்.

கைக்குத்து அரிசி சமைத்துண்ணுங்கள்.



உடனே குணம் தரும். முக்கியஸ்தர்கள் வாங்கி தர்ம வைத்தியம்செய்ய ஏதுகாமுள்ளது. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்பெறும்.

தேள்கடி மருந்து.

தைலம்
சீசா 1-க்கு 0-5-0
சீசா 12-க்கு 3-0-0
குள் புட்டி 1-க்கு 0-6-0
புட்டி 12-க்கு 3-12-0 தபால் செலவு பிரத்தியேகம். குறைந்தது 3 சீசா அல்லது 3-புட்டி தருவிப்பது நலம்.

☞ க. பெ. ச. சமுத்திரம் சகோதரம்
பங்கஜவிலாஸ், விருதுநகர்.

காந்தியடிகள் எழுதிய "ஆரோக்ய வழி" என்னும் புஸ்தகம் படியுங்கள்.

இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக் கிறிஸ்தவ கனவான்களே! எப்போதும் குலக் கடமை தவறாத நாடார்களே !! ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடாருக்கே ஓட்டுக் கொடுங்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection







## "எம்பயர் பாம்."

எல்லா நோய்களுக்கும் தேவாமிர்தம்.

The house hold remedy for all ailments is our "Empire Balm"

ஏஜெண்டுகள் தேவை.

புட்டி 1-க்கு ரூபாய் 0-8-0

டசன் 1-க்கு ரூ 5-0-0

விபரத்திற்கு:- எம்பயர்பாம் மனுபாக்சரிங் கம்பெனியென்ற விலாசத்திற்கு எழுதித்தெரியவும்

கீழ்மாரட்டு வீதி, மதுரை

## HAKEEM. K. MOHAMED YOOSOOF

MUHAMMEDIA MEDICAL HALL

PORTO-NOVO, S. A. Dt[India.]

ஓ நண்பர்காள்!

நமது வைத்தியசாலைக்குநேரில் வந்து பணத்தைப்பற்றி கவனிக்கவேண்டாம். தாதுபுஷ்டிக்காக முதல் தரமானலேகியம். வேணுமென்று கேட்கும் கனவான்களுக்குமட்டும் இதை தனியாகச்செய்து கொடுத்து வந்தோம். இப்போது எல்லா ஜனங்களும் இதன் சுகத்தை அடையும்படி இப்பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தி யிருக்கிறோம்.

உலகத்தில் வெளிவந்திருக்கும் லேகியங்களுக் கெல்லாம் மகுடம்

# இராஜ தத்துவ லேகியம்.

இழந்து போனபலத்துக்கும் தளர்ந்து போன நரம்புகளுக்கும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்டபிறகு அதிக உற்சாகத்துடன் பலத்தை கொடுப்பதில் இதற்கு சமமாய் எதைக்காட்டமுடியும்?

இந்தலேகியம சாப்பிடுகிறவர்கள் இதற்கு சமமானலேகியம்காட்டுவார்களானாலும் சரி அல்லது இதில் சொல்லப்பட்ட குணங்கள் இதில் அவ்வளவாக இல்லையென்று ரூபிப்பார்களானாலும் சரி அவர்களின் பணம் திரும்பக்கொடுத்து விடப்படும்.

உத்தரவாதமுள்ள சத்திய ஔஷதம்.

வீரிய தத்துவத்தையும் நாடி நரம்பு தாதுகளின் உற்சாகத்தையும் கொடுத்து தேக காங்கையினால் நீர்த்துப்போகும் துரிதஸ்கலிதத்தையும் சொற்பனஸ்கலிதத்தையும் 2 வேளை மருந்தில் குணப்படுத்தும். மூளையைபலப்படுத்தி ஞாபகசக்தியைத் தரும். பற்பலவாய்வுரோகம், இடுப்புவலி, கைகாலசந்தி, பசிமந்தம், மலச்சிக்கல் இவைகளை சுகப்படுத்து வதில் முதல் தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர் பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

ஒருராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை 10—0—0

அரைராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 5—0—0

கால்ராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 2—12—0

வி. பி. செலவு வேறு.

நமக்கு நேரில் ஆர்டர் செய்தால் மட்டில் இந்தலேகியம் கிடைக்கும். மற்றவரிடம் கிடைக்காது.

விலாசம்:—

ஹக்கீம், கா. முஹம்மது யூசுபு,

முஹம்மதியா வைத்தியசாலை,

பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா

## உலகெங்கும் பெயர் பெற்ற

## ஸன்பிளவர் சோப்பு & ஸர்தார் சோப்பு.

சர்ட்டிப் பிக்கேட்டுகள் பெற்றவை.

கோல்டு & சில்வர் மெடலிஸ்ட்.




எங்கள் கம்பெனியீர் உ. குபாராத்திற் 1ஆ கட்டு இருச்சல்ல உ. யோரிதைகள்.

| | |
|---|---|
| துணிகளை வெண்மையாக்கக்கூடியது | நூல்களை கெடுதல் செய்யாதது |
| துர்நாற்றங்களை அகற்றக்கூடியது. | யவைற்கு திருப்திகரமுள்ளது |
| மனோற்சாகத்தைத் தரக்கூடியது. | மாணவர் மனதைமகிழச்செய்வது. |
| மலிவான விலைக்குகிடைக்கக்கூடியது. | நுரைகள் மிதக்கக்கூடியது. |
| குளிப்பதற்கு பரிமளமுள்ளது. | கெட்டரசாயனங்கள் சேராதது. |
| கோடைகாலத்திற்கு சுருக்கமில்லாதது | முழுதும் சுத்தமானது. |

குறிப்பு:— விசேஷ வருத்தமின்றி கொஞ்ச நேரத்தில் வஸ்துரங்கள் தோய்க்கப்படும். கடினமான நீரிலும், மிருதுவான நீரிலும், குளிர்ந்த நீரிலும், சுடு நீரிலும், மழை நீரிலும், ஊற்று நீரிலும் உபயோகிக்கலாம்.

வஸ்திரத்தின் அழுகைப் போக்கவும் குளிப்பதற்கும் குளிர்ந்த வாசனையோடு கூடிய சோப் வேண்டுமானால்;

ஸன் பிளவர் சோப்புகளை எப்போதும் உபயோகியுங்கள்.

கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலை விபர ஜாப்தா அனுப்புவோம்.

பிராஞ்சுஆபீஸ்:- அம்மன் சந்நிதி, விட்டவாசல், மதுரை.

V. K. அன் ஸன்,

சவுத் இந்தியன்பிஸ்கட் & சோப் மேனிபாக்சரர்ஸ்.

கீழமார்க்கட்டு நல்லமநாயுடுசந்து, மதுரை.

# ஜெயகாந்தரசம்.

எல்லாவியாதிகளுக்கும் கைகண்டமருந்து ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இது கைவசமிருப்பது ஒருநேர்ந்த தவைத்தியன் பக்கத்திலிருப்பதுபோலாகும்.

விலை புட்டி 1 க்கு ரூ 2

காந்தி சங்கம் உப அக்கிராசனர் ஸ்ரீமான் ஏ. ஈ. துணைசிங்கம் எழுதுகிறார்:— "ஜெயகாந்த ரசத்தை உபயோகித்த அனுபவத்திலிருந்து அதை மிகவும் நல்லமருந்தென்று சொல்லுவேன்."

ஜனாப் அ. ரு. முகம்மது சாலிஹு அவர்கள் எழுதுவதைக் கவனியுங்கள்:— "நெடுநாட்களாக டாக்டர் வரதராஜலு அவர்களின் மின்சாரரசத்தை உபயோகித்துவந்த யாம் அதற்குரிய சகல மேலான குணங்களும் ஜெயகாந்தரசத்திற் கிருப்பதை பிரத்தியக்ஷமாயறிந்து சந்தோஷிக்கிறோம்"

# ஜெயாஞ்சனம்.

எல்லா நோவுகளையும் வலிகளையும் உடனே குணப்படுத்தும் ஒரு திவ்விய அஞ்சனம்.

விலை புட்டி 1 க்கு அணா 12

ஸ்ரீமான் ஜி. கே. சுந்தரம் அவர்கள் எழுதுவதைப் பாருங்கள்:— ஜவதோஷத்துக்கும் தலைவலிக்கும் ஜெயாஞ்சனை உபயோகித்தபின் அமிர்தாஞ்சன், ஓரியண்டல்பாம் போன்ற பிரக்கியாதி பெற்ற மருந்துகளுக்கு சமமாயும் மற்றும் அநேக பாம்களை விட பன்மடங்கு சிறந்ததெனவும் அனுபவ பூர்வமாயறிந்தேன்."

நற்சாட்சிப்பத்திரங்கள் வந்துகொண்டே யிருக்கின்றன.

ஏஜெண்டுகள் தேவை. நல்லகமிஷன்.

K. மாணிக்கவாசகம்,

52, செட்டித்தெரு, கொழும்பு

எங்களிடம் கதர்ப் புடவைகளும் மற்ற சகலவிதமான ஜவுளிகளும் இருக்கின்றன. விலை சரசம்.

## ஜெகமெங்கும் புகழ் பெற்ற

அசல் சேட்



இ. பி. குமரவேல்

நயம் பீடிகள்

அன்பிற் சிறந்த கனவான்களே!

நாம் எல்லோரும் வெகு நாளாக நமது அசல் சேட் இ. பி குமரவேல் பீடிகளை தவிர மற்ற போலி பீடிகளை உபயோகப்படுத்த மாட்டோமென்பது நிச்சயமாய்த் தெரிந்தும் சிலர்கள் போலி பீடிகளைக் கொண்டு ஊர் தோறும் பல பல பெயர்கள் சொல்லி விற்பனை செய்கிறார்கள்.

ஆனதால் நமது அசல் சேட் இ. பி. குமரவேல் பீடி கட்டுகளில் ஒட்டி இருக்கும் லேபில்களை கவனமாய்ப் பார்த்து இ. பி. குமரவேல் பீடிதானா என்று கவனித்து வாங்கி உபயோகப்படுத்தி ஆனந்தியுங்கள்.

புரோப்ரைட்டர்ஸ்,

## இ. பி. குமரவேல் பீடி கம்பெனி

பிராஞ்சுகள்:— செகன்ரூபாத்து, ஐதரபாத்து & கொல்லம்

ஹெட்டாபீஸ், முக்கூடல்.

மேலே குறிப்பிட்ட எங்கள் பிராஞ்சுகளில் நயம் பீடி பல தரங்கள் தயார்செய்து தூர தேசங்களுக்கு V. P. மூலமாயனுப்பி பெரும் கியாதியோடு நடந்தேறிவருகிறது. வேண்டியவர்கள் விபரம் எழுதி கேட்கவும்.

## Prameha Vatika—பிரமேகவட்டிக்கா

இம்மருந்து இருபது வித பிரமேக ரோகங்களுக்கும், சுவப்பன மோசனம், வாதரோகம், நீர் அடைப்பும் அநேக வித இரகசிய வியாதிகளுக்கும் கை கண்டது.

15 நாள் மருந்து ரூ 5—0—0. வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.

A. D. W. Tilakaratna Pandit,

Kadawata, Ceylon.


Printed and Published. By S. A. Muthu Nadar at the Sri Muthumariamman Press, Aruppukotta.